**F–6231**

**Sub. Code**
**7MTA1C1**

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. "பிறப்பினால் எவர்க்கும் உலகில் பெருமை வாராதப்பா சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா" என்று பாடியவர் யார்?

2. முடியரசன் பாடிய கவிதை நூல்களைக் கூறுக.

3. இன்குலாப் இயற்பெயர் யாது?

4. புவியரசு ஆசிரியராக, துணையாசியராகப் பணியாற்றிய இதழ்களின் பெயரினைக் கூறுக.

5. ஜெயகாந்தனின் "போர்வை" சிறுகதை வழியாக அறியலாகும் பாத்திரப் படைப்புகள் மூன்றினைக் கூறுக.

6. நா. பார்த்தசாரதி தமிழாசிரியராகப் பணியாற்றிய பள்ளியின் பெயர் என்ன?

7. வரலாற்று நாவல்கள் மூன்றின் பெயரினை கூறுக.

8. மேலாண்மை பொன்னுச்சாமியின் சாகித்திய அகதெமி விருது பெற்ற நூல் எது? ஆண்டு எது? கூறுக.

9. பாட்டு என்றால் என்ன இருக்க வேண்டும் என்று வ.சுப. மாணிக்கனார் கூறுகிறார்?

10. பேராசியர் ம.திருமலையின் படைப்புகள் நான்கினைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) "இன்பப் பொங்கல்" குறித்து நாமக்கல் கவிஞர் பாடல் வழி அறியலாகும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) துரியோதனன் சகுனியிடன் கூறிய கருத்துக்களை விளக்கி எழுதுக.

12. (அ) "மண்" என்ற புதுக்கவிதை வாயிலாக கவிஞர் அப்துல் ரகுமான் உணர்த்தும் கருத்துக்கள் யாவை? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கவிஞர் மீராவின் கவித் திறனை "மூன்றும் ஆறும்" கவிதை வழி விளக்குக.

13. (அ) "சூரியத் தேர்" சிறுகதை உணர்த்தும் கருத்துக்களை மின்சாரப் பூ வழியாக விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) "எத்தனை கோணம்! எத்தனை பார்வை!" சிறுகதை உணர்த்தும் கதைக் கரு யாது? விளக்குக.

14. (அ) சத்திய வெள்ளம் நாவல் வெளிப்படுத்தும் வேலையில்லாத் திண்டாட்டத்தை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) "குற்றாலக் குறிஞ்சி" நாவலில் இடம்பெறும் ஆண் பாத்திரங்களின் பண்பு நலன்களை எடுத்துரைக்க.

15. (அ) “மகாகவி வள்ளத்தோள்” என்ற கட்டுரை உணர்த்தும் கருத்துக்களை இலக்கிய உலா கொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) “காற்றும் கற்பனையும்” நாடகத்தின் வழி அறியலாகும் கருத்துக்கள் யாவை? தெளிவுபடுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாரதிதாசன் மூடநம்பிக்கையைச் சாடும் பாங்கினை சஞ்சீவி பருவதத்தின் சாரல் கொண்டு நிறுவுக.

17. “தேசப் பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி” கவிதை வழி அறியலாகும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

18. “மின்சாரப் பூ” சிறுகதைத் தொகுப்பு வாயிலாக அறிலாகும் பல்வேறு சமூகப் பிரச்சனைகளைத் தொகுத்துரைக்க.

19. “தோல்” நாவல் புலப்படுத்தும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கை முறையினை விரித்துரைக்க.

20. “நான்மாடக் கூடல்” குறித்து சங்க நெறி புலப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

| F–6232 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**First Semester**

**தமிழ்**

**பக்தி இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. சம்பந்தரின் சிறப்புப் பெயர்களைக் கூறுக.

2. தாண்டக வேந்தர்- பெயர்க்காரணம் குறித்து எழுதுக.

3. நம்பியாரூரர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

4. அற்புதத் திருவந்தாதியின் சிறப்புகள் இரண்டினைக் கூறுக.

5. திருவாய்மொழி என்பதன் பொருள் யாது?

6. பாவை நோன்பு என்றால் என்ன?

7. இரட்சண்ய சரிதம் - பெயர்க்காரணம் தருக.

8. பெரிய பெருமாளுக்குக் காவலாக இருப்பவை யாவை?

9. மஸ்தான் என்பதன் பொருள் யாது?

10. ஆனந்தக் களிப்பு என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) சம்பந்தரின் பாடல்களில் காணலாகும் புராணச் செய்திகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) அப்பர் காட்டும் திருமறைக்காட்டு இறைவனின் சிறப்புகளை விளக்குக.

12. (அ) காரைக்கால் அம்மையார் பாடிய சிவனடியார்களின் இயல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருவாசகத்தில் காணப்படும் இலக்கிய மரபினை விளக்குக.

13. (அ) வைகறைப் பொழுதின் அழகினைத் திருப்பாவை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) திருவரங்கப் பெருமாளின் சிறப்புகளை விளக்குக.

14. (அ) சூழ்வினைப் படலத்தின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மதத் தலைவர்கள் இயேசுவைக் கொலை செய்ய எண்ணியதன் நோக்கத்தை விளக்கி எழுதுக.

15. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபின் வரலாற்றைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பிறப்பினை அறுக்க மஸ்தான் சாகிபு கூறும் வழிமுறைகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தும்பி வாயிலாக மாணிக்கவாசகர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. சேந்தனார் கூறும் திருப்பல்லாண்டு வழித் தில்லையின் சிறப்புகளை விவரிக்க.

18. ஆண்டாள் பாடும் கண்ணனின் சிறப்புகளைக் கட்டுரைக்க.

19. இயேசுவின் சிறப்புகளை இரட்சண்ய சரிதத்தின் வழி நின்று விவரிக்க.

20. ஆனந்தக் களிப்பு புலப்படுத்தும் வாழ்வியல் செய்திகளை எடுத்துரைக்க.

| F–6233 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**First Semester**

தமிழ்

அற இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours — Maximum : 75 Marks

பகுதி அ — $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. இனத்தின் தூய்மை எதைப்பொருத்து இருக்கும் என்கிறார் வள்ளுவர்?

2. குடிமக்கள் அஞ்சுமாறு கொடுங்கோல் ஆட்சி செய்யும் மன்னன் என்ன ஆவான் என்கிறது வள்ளுவம்?

3. கோதுபோல் போகும் உடம்பு எது? தெளிவுபடுத்துக.

4. அணியெல்லாம் ஆடையின் பின் – பொருள் தருக.

5. இருட்டைக் கண்டு அஞ்சம் கண் எது? அஞ்சாத கண் எது? என்கிறார் சிவப்பிரகாசர்?

6. குமரகுருபரர் இயற்றிய நூல்களைக் கூறுக.

7. "கூறாக்கி ஒருகுடியைக் கெடுக்க வேண்டாம்" என்று பாடியவர் யார்? இடம்பெறும் நூல் எது?

8. "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" – பொருள் உரைக்க.

9. "ஈதல் இன்பம்" என்று பாடியவர் யார்? இடம்பெறும் நூல் எது?

10. பாரதியார் பிறந்த ஊர் எது? படைப்புகள் நான்கினைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) இறைமாட்சி அதிகாரம் உணர்த்தும் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) காலத்தின் இன்றியமையாமையை வள்ளுவர் எவ்வாறு உணர்த்துகிறார்? ஆராய்க.

12. (அ) அறிவுடைமை அதிகாரம் உணர்த்தும் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அறன் வழியுறுத்தல் அதிகாரத்தின் வழி சமன முனிவர்கள் கூறும் கருத்துக்களை விளக்குக.

13. (அ) நல்லார் நட்பும், கல்லார் நட்பும் குறித்துச் சிவப்பிரகாசர் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) நீதிநெறி விளக்கம் புலப்படுத்தும் அறக்கருத்துக்களை விளக்கியுரைக்க.

14. (அ) மூதுரை உணர்த்தும் கல்வியின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மோட்சம் பெறுவதற்கு ஔவையார் கூறும் நல்வழிகளை எடுத்துரைக்க.

15. (அ) பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி உணர்த்தும் வாழ்வியல் நெறிகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆத்திச்சூடி வழி அறியலாகும் வாழ்வியல் சிந்தனைகளை ஔவையார் வழி தெளிவுபடுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஒற்றாடல் அதிகாரத்தின் வழி அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. இன்னா நாற்பது உணர்த்தும் வாழ்வியல் கருத்துக்களை விவரிக்க.

18. நீதிநெறி விளக்கம் உணர்த்தும் அறக்கருத்துக்களை விளக்கிக் கட்டுரை வரைக.

19. கொன்றைவேந்தன் உணர்த்தும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. பாரதிதாசனின் ஆத்திசூடி உணர்த்தும் வாழ்வியல் அறங்களை விவரிக்க.

———————

| F–6234 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C4 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**First Semester**

தமிழ்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை)

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours  Maximum : 75 Marks

பகுதி அ  (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. உடனிலை மெய் மயக்கம் என்றால் என்ன?

2. மொழி மரபு என்றால் என்ன?

3. நுனி நா, நுனி அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும் எழுத்துக்களை கூறுக.

4. அண்ணம் சேர்ந்த மிடற்று எழுவளியிசை கண்ணுற் றடையப் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?

5. வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன?

6. குற்றியலுகரச் சொற்கள் என்ன சாரியை பெற்று வரும்? எ.கா. தருக.

7. ‘நிலா’ என்ற சொல் எச்சாரியை பெற்று வரும்? எ.கா. தருக.

8. ‘ஆண் மரக் கிளவி அரை மர இயற்றே’ - பொருள் தருக.

9. திசைப்பெயர்கள் சேரும் போது ஏற்படும் மாற்றம் என்ன? எ.கா. தருக.

10. மாற்றொலிகள் என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குற்றியலுகரம் குறித்து தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்கள் மொழியாக ஆவதனை தொல்காப்பியர் எத்தனை வகையாகப் பகுப்பர்? அவை யாவை? விளக்குக.

12. (அ) மெய்யெழுத்துக்களின் பிறப்பு முறையினைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சார்பெழுத்துக்கள் பிறக்கும் முறை குறித்து விளக்குக.

13. (அ) உயிரீறு, மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) எல்லாரும், எல்லீரும் என்னும் சொற்கள் புணரும் முறை குறித்து விளக்குக.

14. (அ) உகர ஈற்றுப் பெயர்களுக்குக் கூறப்பட்ட விதிகள் யாவை?

(அல்லது)

(ஆ) புள்ளி மயங்கியல் பெயர்க்காரணம் கூறி, ஞகர, நகர ஈறுகள் புணருமாற்றை உதாரணம் தந்து விளக்குக.

15. (அ) 'நூறு முன் வரினும் கூறிய இயல்பே' - விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்து ஒலிப் பாகுபாடுகள் குறித்து மொழியியலார் வழி விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழி முதல், மொழி இறுதி எழுத்துக்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. எழுத்துக்களின் பொதுப்பிறப்பிடங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

18. தொகை மரபு என்னும் தொடர் அவ்வியலுக்குப் பொருந்துமாற்றை விவரிக்க.

19. னகர ஈற்றுப் புணர்ச்சி விதிகளைத் தொகுத்துரைக்க.

20. எண்ணுப் பெயர்கள் புணரும் போது பெறும் மாற்றங்களை விவரிக்க.

———————

| F–6235 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Second Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. அடியார்க்கு நல்லார் உரை கிடைக்காத காதைகள் எத்தனை?

2. பாத்திர மரபு கூறிய காதை இடம் பெறும் காப்பியம் எது?

3. புத்தி சேனன் யார்?

4. பெருங்கதையில் இடம்பெற்றுள்ள காதைகள் எத்தனை?

5. நல் மருந்துபோல் நலன் அற உணங்கிய நங்கை யார்?

6. ஓலை காட்டி ஆண்டவர் யார்?

7. நந்தனம் என்றால் என்ன?

8. வெண்ணெய் வாய்க் கள்வன் யார்?

9. திருச்சபையானது எதைப் போல் நிலைபெற்றது வளரும்?

10. நபி எத்தகைய கையினை உடையவர்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஐயையின் உதவியுடன் கண்ணகி அமுது ஆக்கியதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தீவதிலகை பெயர்க் காரணம் கூறி விளக்குக.

12. (அ) சுரமஞ்சரியை அடைய சீவகன் தரித்த வேடத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பிரச்சோதனன் உதயணனைக் கண்டு வியந்தது எங்ஙனம்?

13. (அ) சீதை கூறிய நல்நிமித்தங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) இறைவன்பின் சுந்தரர் எதையெதை வணங்கிப் பின்சென்றனர்?

14. (அ) காமத்தினைச் செல்வம் என்று திருவிளையாடற் புராணம் குறிப்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தர்மனுக்கு ஏற்பட்ட தீக்குறி பற்றி விளக்குக.

15. (அ) யாரால் இவ்வுலகம் உளது என்கிறது இரட்சணிய யாத்திரிகம்.

(அல்லது)

(ஆ) பத்துச் சலவாம் என்றால் என்ன? விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. துன்பமாலை உணர்த்தும் செய்தியைக் கட்டுரைக்க.

17. சுரமஞ்சரியைத் திருத்தக்கத்தேவர் வருணிப்பதைக் கட்டுரைக்க.

18. அனுமான் தன் வரலாறு கூறுவதனைக் கட்டுரைக்க.

19. துரியோதனனின் சூழ்ச்சியைக் கட்டுரைக்க.

20. மெய்யுணர்ச்சிப் படலம் மொழியும் செய்திகளைக் கட்டுரைக்க.

| F–6236 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Second Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. நந்திக்கலம்பகத்தில் இடம்பெற்ற தமிழ் மாதப் பெயர்கள் யாவை?

2. பிள்ளைத் தமிழின் இலக்கணம் யாது?

3. தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை குறித்து தமிழ்விடுதூது கூறுவது யாது?

4. தூதுப் பொருட்கள் எத்தனை? அவை யாவை?

5. வீரர்களின் கையில் இருந்த வில்லின் ஒலி எதைப் போன்று இருந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

6. மூவேந்தர்களின் கொடியினைக் குறிப்பிடுக.

7. இளைய பள்ளியை மூத்த பள்ளி எவ்வாறு ஏசுகிறாள்? தெளிவுபடுத்துக.

8. அமிராமிப்பட்டர் பாடிய பதிகங்களைக் கூறுக.

9. குறவஞ்சி நூல்களில் காணப்படும் பாக்களைக் கூறுக.

10. “சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா தந்தையினும் பால் கொடுத்த தாய்க்கு” என்ற பாடல் வரி இடம்பெறும் நூல்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க அளவில்** விடையளிக்க.

11. (அ) செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும் முறை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் கூறும் செங்கீரைப் பருவப் பாடலின் சிறப்புக்களைக் கூறுக.

12. (அ) தமிழின் சிறப்பினைப் போற்றும் முறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சொக்க நாதரின் பெருமைகளைத் தமிழ்விடு தூது வழி நின்று விளக்குக.

13. (அ) கலிங்கத்துப் பரணி காளிக்குக் கூளி கூறிய பாடல் பகுதியில் இடம்பெறும் உவமை அணியின் சிறப்புக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) விக்கிரம சோழனின் போர்ச் சிறப்பை விளக்கி எழுதுக.

14. (அ) முக்கூடற்பள்ளில் சுந்தரமூர்த்தி நாயனார் பெறுமிடத்தினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) அபிராமி அம்மையின் தோற்றப் பொலிவு குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) வசந்தவல்லியிடம் குறத்தி குறி கூறத் தொடங்கும் முறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) திருநாவுக்கரசரின் சிறப்புக்களை நால்வர் நான்மணி மாலை கொண்டு விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக் கட்டுரை வடிவில்** விடையளிக்க.

16. நந்தி கலம்பகத்தில் வரும் தோழி கூற்றினை நும் செய்யுட் பகுதி கொண்டு விவரிக்க.

17. தமிழை அரசனாக உருவகம் செய்து தலைவி புகழும் வகையை விவரிக்க.

18. கலிங்கத்துப் பரணியில் இடம்பெறும் போர்க்களக் காட்சிகளை விவரிக்க.

19. அபிராமியம்மையின் திருவடிச் சிறப்புக் குறித்துக் கட்டுரை வரைக.

20. நால்வர் நான்மணி மாலையின் சிறப்புக்களை சிவப்பிரகாச சுவாமிகள் வழி நின்று விவரிக்க.

———————

| F–6237 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C4 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Second Semester**

தமிழ்

தொல்காப்பியம் – சொல்லதிகாரம் (சேனாவரையர் உரை)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. உயர்திணைக்குரிய மூன்று பால்களைக் கூறுக.

2. தகுதி வழக்கு என்றால் என்ன?

3. தற்கிழமை என்றால் என்ன?

4. ஆன் ஈறு எவ்வாறு நின்று விளியேற்கும்? தெளிவுபடுத்துக.

5. வினைச் சொல்லின் இலக்கணம் தருக.

6. உயர்திணை படர்க்கை பன்மைச் சொற்களைக் கூறுக.

7. முன்னிலை அசைச் சொற்களைக் கூறுக.

8. ‘தட என் கிளவி கோட்டமும் செய்யும்’– விளக்குக.

9. இரட்டைக் கிளவி என்றால் என்ன?

10. உருபனியல் என்றால் என்ன?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் எவ்வாறு கிளக்கப்பட வேண்டும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) பகுதிக் கிளவி பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்து யாது?

12. (அ) எழுவாய் வேற்றுமை குறித்த செய்திகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆகுபெயரை விளக்கி அதன் பாகுபாட்டை உணர்த்துக.

13. (அ) விரவுப்பெயர்களைப் தொல்காப்பியர் வழி நின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) வினையெச்சங்களைத் தொல்காப்பியர் வழி நின்று வகுத்துக்காட்டுக.

14. (அ) மன், தில் கொன் என்னும் இடைச் சொற்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உரிச்சொல் பொருள் உணர்த்தும் முறை குறித்து விளக்குக.

15. (அ) சுண்ணம், மொழி மாற்று இவற்றை வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) உருபன்களைப் பிரித்தறிய நைடா கூறியுள்ள ஆறுவகைக் கோட்பாடுகளை விளக்கித் தமிழில் அவற்றைப் பொருத்திக்காட்டுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் **கட்டுரை** வடிவில் விடை தருக.

16. இனச்சுட்டில்லா பண்புகொள் பெயர்க்கொடையும் வண்ணச் சினைச்சொல்லையும் ஒப்பிடுக.

17. எழுவாய் வேற்றுமை, விளிவேற்றுமை ஆகியவற்றை ஒப்பிடுக.

18. பெயரெச்ச வாய்ப்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. உரியியல் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. பொருள்கோளின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–6239 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3C1 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021

### Third Semester

### தமிழ்

### சங்க இலக்கியம்

### (CBCS – 2017 onwards)

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                                        ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. 'பாடாண் திணை' என்றால் என்ன?

2. சங்கப் புறப்பொருள் இலக்கியங்களைப் பட்டியலிடுக.

3. 'வரைவு கடாதல்' என்றால் என்ன?

4. 'பகற்குறி – இரவுக்குறி' குறிப்பு வரைக.

5. தலைவியின் நலம் பாடிய தலைவன் வண்டிடம் உரைத்தது என்ன?

6. பரிபாடலின் பகுப்பு முறையைப் பட்டியலிடுக.

7. குறிஞ்சிப்பாட்டின் வேறுபெயர் யாது?

8. 'நெஞ்சாற்றுப்படை' என்றால் என்ன?

9. சிறுபாணாற்றின் அடியளவு, அதில் பாடப்பெற்ற நாடு யாது?

10. பட்டினப்பாலையைப் பாடிய புலவரையும் பாட்டுடைத் தலைவரையும் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனுக்கு முரஞ்சியூர் முடிநாகராயர் செவியறிவுறூத்திய திறத்தினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சேரனது படைவீரரின் சிறப்புகளாகப் பதிற்றுப்பத்து கூறுவனவற்றினை விளக்கியுரைக்க.

12. (அ) 'நீ செல்லும் கானம் தகைப்ப செலவு' என்று கலித்தொகைத் தோழி கூறக் காரணமானவற்றை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) மருதத்திணை 'வேழப்பத்து' வெளிப்படுத்தும் செய்திகளை தொகுத்துரைக்க.

13. (அ) சேவலங்கொடியோனின் தோற்றத்தினைப் பரிபாடல் வழிநின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) நற்றிணை காட்டும் பாலைநிலக் காட்சிகளை எடுத்துரைக்க.

14. (அ) மழையினால் செழித்த முல்லை நில அழகினை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிப்பாட்டில் தோழி அறத்தொடு நின்ற திறத்தினை விளக்கியுரைக்க.

15. (அ) பட்டினப்பாலை குறிப்பிடும் பலவகைக் கொடிகளின் காட்சிச் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நல்லியக்கோடானின் தலைமைச் சிறப்புகளை விவரித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. புறநானூற்றுப் பாடல்களால் அறியலாகும் அரசியல் செய்திகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

17. அகநானூற்றுப் பாடல்களில் கருப்பொருள் இடம்பெறும் சிறப்பினை விவரிக்க.

18. குறுந்தொகை மருதத்திணைப் பாடற்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

19. முல்லைப்பாட்டு வழி அறியலாகும் அக்காலப் பாசறை, படைவீடு குறித்துக் கட்டுரை வரைக.

20. பட்டினப்பாலை புறப்பொருளை அதிகம் கூறினாலும் அகப்பொருளை அதிகம் கூறுகின்றது? என்பதனை நிறுவுக.

———————

| F–6240 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Third Semester**

தமிழ்

தொல்காப்பியம் – பொருளதிகாரம் – (நச்சினார்க்கினியர் உரை)
(முதல் ஐந்து இயல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பாலை நிலத்திற்குரிய காலத்தினைக் குறிப்பிடுக.

2. பிரிவின் வகைகள் யாவை?

3. யானை நிலை என்றால் என்ன?

4. தார் நிலை என்றால் என்ன?

5. அசுரம் என்றால் என்ன?

6. அல்ல குறிப்படுதல் என்றால் என்ன?

7. கரணம் தோன்றுவதற்கான காரணங்களைக் கூறுக.

8. காவல் பிரிவின் தன்மை யாது?

9. ‘சுரமென மொழிதலும் வரைநிலை இன்றே’ விளக்குக.

10. ‘இறைச்சி தானே பொருள் புறந்ததுவே’ – பொருள் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) "செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே" – விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்டோர் கூற்றுகள் யாவை விளக்கி எழுதுக.

12. (அ) அகத்திணைக்கு இணையாக ஏழு புறத்திணைகள் அமைந்துள்ள பாங்கினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆண்பாற் காஞ்சித் துறைகளை வரைக.

13. (அ) தலைவன், தலைவி ஆகியோர்க்கிடையே மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதற்குரிய காலம் எப்போது? தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) களவொழுக்கத்தின் கண் செவிலிக்குரிய பங்கினை விளக்கி எழுதுக.

14. (அ) தலைவனின் பெருமை சிறுமைகளாகத் தோழி கூறும் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) காமக்கிழத்தியர் என்பார் யார்? அவர் தம் செயல்களை விளக்கி எழுதுக.

15. (அ) ஒருசார் காமப் பொருண்மை பற்றி நிகழும் கிளவிகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'போக்கும் வரவும் மனைவிக் கண் தோன்றும்' – தெளிவுபடுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. முதல், கரு, உரிப்பொருள் பற்றி அகத்திணையியல் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. வெட்சித் திணையின் இலக்கணத்தையும் துறைகளையும் பற்றித் தொல்காப்பியர் வழி நின்று விவரிக்க.

18. களவுக் காலத்தில் நிகழும் தலைவன் கூற்றுக்களைத் தொகுத்துரைக்க.

19. செவிலி அல்லது அறிவர் மொழிகளை வகைப்படுத்தியுரைக்க.

20. தோழி அறத்தொடு நிற்கும் பாங்கினை விவரிக்க.

———————

| F–6241 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3C3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Third Semester**

தமிழ்

ஆராய்ச்சி நெறிமுறைகள்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. இலக்கிய ஆய்வு என்றால் என்ன?
2. ஆய்வாளரின் தகுதிகள் இரண்டினைக் கூறுக.
3. வினா நிரல் என்றால் என்ன?
4. கள ஆய்வு என்றால் என்ன?
5. ஆய்வேடு என்றால் என்ன?
6. அடிக்குறிப்பு என்றால் என்ன?
7. உரையாசிரியர் என்பவர் யார்?
8. மேலைநாட்டு இலக்கண ஆய்வாளர்கள் இருவரின் பெயரினைக் கூறுக.
9. மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் படைப்புகள் மூன்றினைக் கூறுக.
10. வையாபுரிப்பிள்ளை அவர்களின் ஆய்வுப் பணிகள் இரண்டினைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) அறிவியல் ஆய்வு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆய்வாளரின் அடிப்படைத் தகுதிகள் குறித்து விளக்குக.

12. (அ) ஆய்விற்குத் தகவல் திரட்டலின் தேவை குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆய்வில் கருதுகோள் பெறுமிடம் யாது? மதிப்பிடுக.

13. (அ) ஆய்விற்கு நூலடங்களின் தேவை குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆய்வேட்டில் பின்னிணைப்பு பெறும் இடம் யாது? விளக்குக.

14. (அ) தமிழாய்வின் முன்னைய நிலை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மேலைநாட்டு ஆய்வாளர்களின் இலக்கியப் பணிகள் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) உ.வே.சா. அவர்களின் பதிப்புப் பணிகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வையாபுரிப்பிள்ளையின் ஆய்வுப் பார்வை குறித்துத் தெளிவுபடுத்துக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆய்வு வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. ஆய்விற்குத் தலைப்புத் தெரிவு செய்யும் முறை குறித்துக் கட்டுரை வரைக.

18. ஆய்வேட்டில் துணை நூற்ப்பட்டியலின் இன்றியமையாமை குறித்து விவரிக்க.

19. தமிழாய்வின் வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

20. மு.வ. அவர்களின் இலக்கியத் திறனாய்வுப் பார்வை குறித்து விவரிக்க.

———————

| F–6242 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3E1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Third Semester**

தமிழ்

விருப்பப்பாடம் – ஊடகத் தமிழ்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பறை என்றால் என்ன?

2. நிகழ்த்துக்கலைகள் இரண்டின் பெயரினைக் கூறுக.

3. பேஜர் என்றால் என்ன?

4. இணையம் என்றால் என்ன?

5. தொலைபேசி என்றால் என்ன?

6. பண்பலை என்றால் என்ன?

7. கம்பிவழித் தொலைக்காட்சி என்றால் என்ன?

8. இந்தியாவில் முதல் தொலைக்காட்சி நிலையம் தொடங்கப்பட்ட ஆண்டு இடம் ஆகியவற்றைக் கூறுக.

9. DTP – விரிவாக்கம் தருக.

10. மின்னணு அஞ்சல் என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒருபக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) தகவல் தொடர்பில் மரபு வழி சாதனத்தின் பங்கு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தகவல் தொடர்பில் நிகழ்த்துக்கலைகள் பெறுமிடத்தினை ஆராய்க.

12. (அ) இணையதள வசதி பெறும் முறைகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இதழ்களில் எந்திரப் பகுதியின் பணிகள் குறித்து விளக்குக.

13. (அ) சுதந்திரத்திற்குப்பின் தொலைபேசித்துறையின் வளர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செயற்கைக்கோள் வானொலி நிலையத்தின் பயன்பாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) தொலைக்காட்சியின் வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அரசு நடத்தும் தொலைக்காட்சி நிலையத்தின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

15. (அ) தகவல் தொடர்பிற்குப் பயன்படுத்தப்படும் கணினியின் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) செயற்கைக்கோளின் இன்றியமையாமை குறித்து விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தகவல் தொடர்பில் வில்லுப்பாட்டு பெறுமிடத்தினை ஆராய்க.

17. இந்தியாவில் தந்தி முறைத் தொலைபேசியின் வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

18. வானொலியின் வகைகள் குறித்து விவரிக்க.

19. உலகத் தொலைக்காட்சி தோன்றி வளர்ந்த விதம் குறித்துக் கட்டுரை வரைக.

20. இணையதளத்தின் வரலாறுகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–6243 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3E5 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Third Semester**

தமிழ்

விருப்பப்பாடம் - பணிவாய்ப்புத் தமிழ்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க. $(75 \times 1 = 75)$

1. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலியை உருவாக்கியவர்

   (அ) எஸ்.வையாபுரிப்பிள்ளை

   (ஆ) கதிரைவேற்பிள்ளை

   (இ) தேவநேயப்பாவாணர்

   (ஈ) மறைமலையடிகள்

2. வீரமாமுனிவர் திருக்குறளை ———————— மொழியில் மொழிபெயர்த்தார்.

   (அ) இலத்தீன் (ஆ) கிரேக்கம்

   (இ) எபிரேயம் (ஈ) ஆங்கிலம்

3. எட்டுத்தொகையில் அகமும் புறமும் கலந்த நூல்

   (அ) நெடுநல்வாடை (ஆ) பட்டினப்பாலை

   (இ) அகநானூறு (ஈ) பரிபாடல்

4. ‘மொழி வரலாறு’ என்னும் நூலின் நூலாசிரியர்

(அ) டாக்டர் ரா.சீனிவாசன் (ஆ) டாக்டர் மு.வ.

(இ) டாக்டர் தெ.பொ.மீ (ஈ) டாக்டர் கி.அரங்கன்

5. ‘வச்சணந்தி மாலை’ என்பது

(அ) இலக்கண நூல் (ஆ) பாட்டியல் நூல்

(இ) சிற்றிலக்கியம் (ஈ) நிகண்டு

6. ‘பூமியைத் திறக்கும் பொன் சாவி’ எனும் நூலின் ஆசிரியர்

(அ) வாணிதாசன் (ஆ) தாராபாரதி

(இ) சுரதா (ஈ) சுஜாதா

7. சங்கம் இருந்ததற்கானச் சான்று பகர்வது

(அ) உத்திரமேரூர் கல்வெட்டு

(ஆ) அசோகர் கல்வெட்டு

(இ) மாமல்லைச் சிற்பங்கள்

(ஈ) சின்னமனூர்ச் செப்பேடு

8. ஆரியர்களும், திராவிடர்களும் சிந்து நதிக்கரையில் சேர்ந்து வாழ்ந்தபோது உருவான புதிய கலப்பு மொழி

(அ) பிராகிருத மொழி (ஆ) இந்தி மொழி

(இ) துளு மொழி (ஈ) கோந்தி மொழி

9. கீழ்க்காண்பவற்றுள் எது மு.வரதராசன் எழுதிய சங்க இலக்கியம் குறித்த ஆய்வு நூல்?

(அ) குருவிப்போர் (ஆ) ஔவை யார்?

(இ) காதல் ஓவியங்கள் (ஈ) கொடை வளம்

10. ‘நோய்க்கு மருந்து இலக்கியம்’ எனக் கூறியவர்

(அ) கா.சு.பிள்ளை

(ஆ) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

(இ) அ.ச. ஞானசம்பந்தன்

(ஈ) உ.வே.சாமிநாதஐயர்

11. தொகை நூல்களுள் முதல் முதலாகத் தொகுக்கப் பெற்ற நூல்

(அ) ஐங்குறுநூறு (ஆ) நற்றிணை

(இ) குறுந்தொகை (ஈ) பரிபாடல்

12. வெண்ணாவலுடையார் எழுதியது

(அ) யசோதர காவியம் (ஆ) உதயண குமார காவியம்

(இ) நாக குமார காவியம் (ஈ) சூளாமணி

13. ‘திராவிடர்’ என்ற சொல் இடம்பெற்ற இதிகாசம்

(அ) வால்மீகி இராமாயணம்

(ஆ) கம்பராமாயணம்

(இ) பாரதம்

(ஈ) வில்லி பாரதம்

14. ‘மனுமுறை கண்ட வாசகம்’ என்ற நூலின் ஆசிரியர்

(அ) குமரகுருபரர் (ஆ) மணிவாசகர்

(இ) சிவஞான முனிவர் (ஈ) வள்ளலார்

15. புறநானூற்றில் அதிக பாடல்களைப் பாடியவர்

(அ) பொன்முடியார் (ஆ) கபிலர்

(இ) பரணர் (ஈ) ஔவையார்

16. ரேனியஸ் (Rhenious) எழுதிய நூல் எது?

(அ) தமிழ் மொழியின் இலக்கணம்

(ஆ) மரபுத் தமிழ் இலக்கணம்

(இ) மொழி வரலாறு

(ஈ) இலக்கணத் தமிழ்

17. சமயதிவாகரம் எனப்படுவது

(அ) மணிமேகலை உரை (ஆ) நீலகேசி உரை

(இ) திரிகடுகம் (ஈ) நாலடியார்

18. ‘வேதவித்து’ என்றழைக்கப்படுவது

(அ) திருவாசகம் (ஆ) தேவாரம்

(இ) திருமறை (ஈ) திருப்பாவை

19. பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்த ஆற்றுப்படை நூல்

(அ) திருமுருகாற்றுப்படை

(ஆ) பொருநராற்றுப்படை

(இ) பெரும்பாணாற்றுப்படை

(ஈ) எதுவுமில்லை

20. ‘பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்’ என்று ஒரே வரியில் அறக்கருத்துக்களைக் கூறும் எட்டுத்தொகை நூல்

(அ) நற்றிணை (ஆ) கலித்தொகை

(இ) குறுந்தொகை (ஈ) அகநானூறு

21. பத்து பத்துக்களைக் கொண்ட நீதி நூல்

(அ) ஆசாரக்கோவை (ஆ) பதிற்றுப்பத்து

(இ) முதுமொழிக்காஞ்சி (ஈ) இன்னிலை

22. ‘பிள்ளைகள் பள்ளிக்கூடத்தையும் தம் வீட்டைப் போல் உணர வேண்டும். தாய்மொழியே அவ்வுணர்வைத் தரும். அயல்மொழி இந்த இலக்கத்தைக் குலைத்து விடும்’ இவ்வாறு கூறியவர்

(அ) தந்தை பெரியார் (ஆ) பேரறிஞர் அண்ணா

(இ) இராஜாஜி (ஈ) காந்திஜி

23. ‘நெஞ்சாற்றுப்படை’ என்ற பெயர் கொண்ட நூல்

(அ) குறிஞ்சிப்பாட்டு (ஆ) முல்லைப்பாட்டு

(இ) பட்டினப்பாலை (ஈ) நெடுநல்வாடை

24. ‘அறத்தொடு நிற்றல்’ துறையில் அமைந்த பத்துப்பாட்டு நூல்

(அ) குறிஞ்சிப்பாட்டு (ஆ) முல்லைப்பாட்டு

(இ) பட்டினப்பாலை (ஈ) திருமுருகாற்றுப்படை

25. கீழ்க்காண்பவற்றுள் எது தமிழ் பண்பாட்டுச் சிறப்புக்காக கம்பரால் புகுத்தப்பட்ட ராமாயணப்பகுதி

(அ) வாலி வதைப்படலம் (ஆ) மிதிலைக்காட்சி

(இ) மாயாசிகைப்படலம் (ஈ) அகலிகை விமோசனம்

26. வினையெச்சத்தைக் குறிப்பிடுக

(அ) ஆடிப்பாடி

(ஆ) மகிழ்ந்த பாடினான்

(இ) கடுமையாக உழைத்தாள்

(ஈ) படித்த மாணவன்

27. ‘நறவு மகிழ்தல்’ என்பது

(அ) தேன் சுவைத்தல் (ஆ) இறை இன்பம் அனுபவித்தல்

(இ) ஆன்மா (ஈ) இன்பம்

28. குறுந்தொகையின் அடிவரையறையைக் கூறுக

(அ) 3 முதல் 13 அடி வரை

(ஆ) 9 முதல் 12 அடி வரை

(இ) 4 முதல் 40 அடி வரை

(ஈ) 4 முதல் 8 அடி வரை

29. கல்லாடம், சுந்தர பாண்டியம் என்பன

(அ) இலக்கண நூல்

(ஆ) உரை நூல்

(இ) திருவிளையாடல் புராண முன்னோடிகள்

(ஈ) நாடக நூல்

30. மனிதனின் மன நிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிட்டவர்

(அ) விபுலானந்தர் (ஆ) முத்துராமலிங்கத்தேவர்

(இ) திரு.வி.க. (ஈ) ஆறுமுக நாவலர்

31. வையையைச் சிறப்பித்துப் பாடும் சங்க நூல்

(அ) தொல்காப்பியம் (ஆ) சிலப்பதிகாரம்

(இ) பட்டினப்பாலை (ஈ) பரிபாடல்

32. ‘பத்துப்பாட்டில்’ மிகச்சிறிய நூல் எது?

(அ) குறிஞ்சிப்பாட்டு (ஆ) பட்டினப்பாலை

(இ) முல்லைப்பாட்டு (ஈ) மதுரைக்காஞ்சி

33. சின்னச் சீறா பாடியவர்

(அ) அபுல்காசிம் மரைக்காயர்

(ஆ) சீதக்காதி

(இ) செய்யதுகாதர் மரைக்காயர்

(ஈ) பனீ அகமது மரைக்காயர்

34. 63 நாயன்மார்களின் கதையைக் கூறும் கல்வெட்டு அமைந்துள்ள இடம்

(அ) தாராசுரம் (ஆ) கும்பகோணம்

(இ) சுவாமிமலை (ஈ) பசுபதிகோயில்

35. குடவோலைத் தேர்தல் முறை பற்றிக் குறிப்பிடும் நூல்

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு

(இ) கலித்தொகை (ஈ) பதிற்றுப்பத்து

36. முல்லைத்திணையில் உரிப்பொருள்

(அ) இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

(ஆ) புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

(இ) இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

(ஈ) ஊடலும் ஊடல் நிமித்தமும்

37. பிள்ளைத்தமிழ் பாடப்படும் ஆணின் உச்ச வயது வரம்பு

(அ) 20 மாதம் (ஆ) 16 வயது

(இ) 10 வயது (ஈ) 10 மாதம்

38. 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' எனக் கூறும் நூல்

(அ) நன்னூல் (ஆ) வீரசோழியம்

(இ) தொல்காப்பியம் (ஈ) புறநானூறு

39. 'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் வேண்டாம்' என்று சொல்லிய மிசச் சிறந்த அகநூலின் பெயர்

(அ) பரிபாடல் (ஆ) ஐங்குறுநூறு

(இ) பட்டினப்பாலை (ஈ) பதிற்றுப்பத்து

40. அட்ட பிரபந்தம் பாடியவர்

(அ) அழகிய மணவாளதாசர்

(ஆ) விசாகப் பெருமாள் ஐயங்கார்

(இ) ராமானுஜர்

(ஈ) நம்ஜீயர்

41. பாலைத் திணைக்கு உரிய புறத்திணை

(அ) வஞ்சி (ஆ) வாகை

(இ) வெட்சி (ஈ) காஞ்சி

42. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்துவதற்குப் பாடப்பட்டது

(அ) பட்டினப்பாலை (ஆ) நெடுநல்வாடை

(இ) முல்லைப்பாட்டு (ஈ) குறிஞ்சிப்பாட்டு

43. தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் நிறுவியவர்

(அ) கால்டுவெல் (ஆ) எல்லீஸ்

(இ) சீகன் பால்கு (ஈ) ராபர் டி நொபிலி

44. பரிபாடலுக்கு உரிய சிறப்புப் பெயர்

(அ) முருகன் (ஆ) திருமால்

(இ) அருகன் (ஈ) சிவபெருமான்

45. மதுரை மடத்தை நிறுவியவர்

(அ) மங்கையற்கரசியார் (ஆ) கூன் பாண்டியன்

(இ) சிவஞான முனிவர் (ஈ) குமரகுருபரர்

46. 'இவள் உயிர்தவச்சிறிது காமமோ பெரிது' என்ற கூற்று யாருடையது?

(அ) தோழி (ஆ) தலைவி

(இ) தலைவன் (ஈ) செவிலி

47. வீரமாமுனிவரின் நூல்களைத் திரட்டித் தொகுத்தவர்

(அ) மு.தெய்வநாயகம் (ஆ) முத்துசாமிப்பிள்ளை

(இ) வேதநாயகசாஸ்திரி (ஈ) வேதநாயகம்பிள்ளை

48. உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டிட, மிகுதியாக எடுத்தாளப் பெற்ற நூல்

(அ) அகநானூறு (ஆ) நற்றிணை

(இ) குறுந்தொகை (ஈ) ஐங்குறுநூறு

49. அருணகிரிநாதர் திருப்புகழில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இசுலாமிய பெரியவர்

(அ) சவ்வாதுப்புலவர் (ஆ) காசிம் புலவர்

(இ) குலாம்காதிரு நாவலர் (ஈ) வண்ணக்களஞ்சியப் புலவர்

50. ஏறுதழுவுதலை எடுத்தியம்பும் சங்க இலக்கியம்

(அ) நற்றிணை (ஆ) கலித்தொகை

(இ) குறுந்தொகை (ஈ) அகநானூறு

51. நால்வர் பாடல்களில் முதன்முதலில் பதிப்புக்கண்டது யாருடையது?

(அ) ஞானசம்பந்தர் (ஆ) நாவுக்கரசர்

(இ) மாணிக்கவாசகர் (ஈ) சுந்தரர்

52. பத்துப்பாட்டு முழுமைக்கும் உரை எழுதியவர்

(அ) நச்சினார்க்கினியர் (ஆ) அடியார்க்கு நல்லார்

(இ) தெய்வச்சிலையார் (ஈ) சேனாவரையர்

53. இராமானுஜர் என்ற நூலுக்காக சரஸ்வதி சம்மான் விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்

(அ) த.ஜெயகாந்தன் (ஆ) தி.க.சிவசங்கரன்

(இ) இந்திராபார்த்த சாரதி (ஈ) அசோகமித்திரன்

54. கரிகால் வளவனைப் பாடும் நூல்

(அ) பொருநராற்றுப்படை (ஆ) திருமுருகாற்றுப்படை

(இ) கூத்தராற்றுப்படை (ஈ) சிறுபாணாற்றுப்படை

55. முழுவதும் வசனத்தில் வந்த முதல் நாடகம்

(அ) டம்பாச்சாரி விலாசம் (ஆ) பிரதாப சரித்திர விலாசம்

(இ) சித்தராங்கி விலாசம் (ஈ) பாரத விலாசம்

56. சேர அரசர்கள் பதின்மரைப் பற்றிப் பாடப்பெற்ற நூல்

(அ) புறநானூறு (ஆ) கலித்தொகை

(இ) அகநானூறு (ஈ) பதிற்றுப்பத்து

57. ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மிகுதியும் தமிழில் மொழிபெயர்த்து மேடையேற்றியவர்

(அ) சங்கரதாஸ் சுவாமிகள்

(ஆ) பம்மல் சம்பந்தம்

(இ) திண்டிவனம் ராமசாமி ராஜா

(ஈ) காசி விஸ்வநாத முதலியார்

58. பத்துப்பாட்டில் கூத்தராற்றுப்படை எனப்படுவது

(அ) மலைபடுகடாம் (ஆ) குறிஞ்சிப்பாட்டு

(இ) மதுரைக்காஞ்சி (ஈ) பட்டினப்பாலை

59. நன்னூலின் முதல் உரையாசிரியர்

(அ) சங்கர நமச்சிவாயர் (ஆ) சிவஞான முனிவர்

(இ) மயிலை நாதர் (ஈ) ஆறுமுக நாவலர்

60. 'பாரி, பாரி' என்று பல ஏந்தி என்று பாடியவர்

(அ) கபிலர் (ஆ) கம்பர்

(இ) ஔவையார் (ஈ) ஒட்டக்கூத்தர்

61. பிரெஞ்சு மொழியிலிருந்து 'தபால் காரன்' என்ற நாவலை மொழிபெயர்த்தவர்

(அ) ஆர்.சண்முக சுந்தரம் (ஆ) க.நா.சு.

(இ) க.ஸ்ரீ.ஸ்ரீ (ஈ) புதுமைப்பித்தன்

62. பெண்பால் புலவரால் பாடப்பட்ட பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?

(அ) பாண்டியன்

(ஆ) சோழன் நலங்கிள்ளி

(இ) கரிகால் பெருவளத்தான்

(ஈ) சேரன் செங்குட்டுவன்

63. 'ஈழத்து இலக்கிய முன்னோடிகள்' என்ற திறனாய்வு நூலை எழுதியவர்

(அ) க.கைலாசபதி (ஆ) சிவத்தம்பி

(இ) சேரன் (ஈ) நுஃமான்

64. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த கொள்கையை உலகிற்கு அளித்த சங்க இலக்கிய புறநூல்

(அ) பதிற்றுப்பத்து (ஆ) பரிபாடல்

(இ) மதுரைக்காஞ்சி (ஈ) புறநானூறு

65. சைவசமய இலக்கிய வரலாறு எழுதியவர்

(அ) க.வெள்ளைவாரணார் (ஆ) ஔவை துரைசாமி

(இ) ஆறுமுக நாவலர் (ஈ) கா.சுப்ரமணியம்

66. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

(அ) நாலடியார் (ஆ) ஆத்திச்சூடி

(இ) நல்வழி (ஈ) கொன்றை வேந்தன்

67. வீரசோழியம் என்ற ஐந்திலக்கண நூலை முதன் முதலில் பதிப்பித்தவர்

(அ) சி.வை.தாமோதரம்பிள்ளை

(ஆ) ஆறுமுக நாவலர்

(இ) மழவை மகாலிங்கம்

(ஈ) உ.வே.சா

68. சமண முனிவர்களால் எழுதப்பட்ட நீதிநூல்

(அ) ஏலாதி (ஆ) நாலடியார்

(இ) திரிகடுகம் (ஈ) சிறுபஞ்சமூலம்

69. 'உள்ளத்து உள்ளது கவிதை-இன்ப

உருவெடுப்பது கவிதை' எனப் பாடியவர்

(அ) பாரதியார்

(ஆ) பாரதிதாசன்

(இ) தேசிக விநாயகம் பிள்ளை

(ஈ) வெ.ராமலிங்கம் பிள்ளை

70. சமயப் பூசல் அடிப்படையில் தோன்றிய காப்பியங்கள் என்னென்ன?

(அ) சூளாமணி, நீலகேசி

(ஆ) குண்டலகேசி, நீலகேசி

(இ) சூளாமணி, குண்டலகேசி

(ஈ) யசோதர காவியம், நாககுமார காவியம்

71. சமணர்களின் பெருங்காப்பியம்

(அ) திருக்குறள் (ஆ) மணிமேகலை

(இ) வளையாபதி (ஈ) சீறா

72. 'மணநூல்' எனப்படுவது

(அ) திருக்குறள் (ஆ) மணிமேகலை

(இ) பெரியபுராணம் (ஈ) சிலப்பதிகாரம்

73. மருட்பாவின் ஈற்றடி

(அ) சிந்தடி (ஆ) அளவடி

(இ) நெடிலடி (ஈ) குறளடி

74. வள்ளல் சீதக்காதியால் ஆதரிக்கப்பட்டவர்

(அ) உமறுப்புலவர்

(ஆ) முகமது உசைன் புலவர்

(இ) நயினா முகம்மது புலவர்

(ஈ) குணங்குடி மஸ்தான் சாகிபு

75. சூளாமணி எத்தனைச் சருக்கங்களை உடையது?

(அ) 10 (ஆ) 12

(இ) 14 (ஈ) 16

| F–6245 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Fourth Semester**

தமிழ்

நாட்டுப்புறவியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. நாட்டுப்புறவியல் என்றால் என்ன?

2. நாட்டுப்புறவியல் அறிஞர்கள் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.

3. நாட்டுப்புறக் கதைகள், கதைப்பாடல்கள் வேறுபடுத்துக.

4. விடுகதை என்றால் என்ன?

5. நாட்டார் உணவு முறை குறித்து எழுதுக.

6. சடங்குகள் என்றால் என்ன?

7. நாட்டுப்புறக் கலைகள் மூன்றின் பெயரினைக் கூறுக.

8. நாட்டுப்புற விளையாட்டுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. நாட்டார் வழக்காற்றியல் என்றால் என்ன?

10. சமூகவியல் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) நாட்டுப்புறவியல் வகைப்பாட்டினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியலின் தோற்றம் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) தாலாட்டுப் பாடல்கள் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) பழமொழியின் வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) சிறுதெய்வ வழிபாடு பற்றி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறப் பண்பாட்டில் விழாக்கள் பெருமிடம் குறித்து விளக்குக.

14. (அ) சிலம்பாட்டம் என்றால் என்ன? அதன் சிறப்புகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கும்மி, கோலாட்டம் இரண்டின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

15. (அ) நாட்டுப்புறவியலும் வரலாற்றியலும் குறித்துச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியலும் சமூகவியலும் பற்றி விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் **கட்டுரை** வடிவில் விடையளிக்க.

16. நாட்டுப்புறவியலின் வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

17. நாட்டுப்புறப்பாடல்களுள் கதைப்பாடல்களும் பெருமிடத்தினை ஆராய்க.

18. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் குறித்துக் கட்டுரை வரைக.

19. நாட்டுப்புற விளையாட்டுகள் பற்றி கட்டுரை வரைக.

20. நாட்டுப்புறவியலும் உளவியலும் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–6478 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1E1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**First Semester**

தமிழ்

விருப்பப்பாடம் : ஒப்பிலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. ஒப்பிலக்கியத்தின் பண்புகள் இரண்டினைக் கூறுக.

2. 'உலக இலக்கியம்' என்னும் தொடரை முதன்முதலில் கையாண்ட செருமன் நாட்டுக் கவிஞர் யார்?

3. உரையாசிரியர்கள் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.

4. வ.வே.சு ஐயரின் படைப்புகள் இரண்டினைக் கூறுக.

5. தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகள் எத்தனை? அவை யாவை?

6. ரசக் கோட்பாடு என்றால் என்ன?

7. தமிழ் அற இலக்கியங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

8. கம்பர் தம் காவியத்திற்கு இட்ட பெயரினைக் கூறுக.

9. ஐரோப்பிய புதுக்கவிதைகள் என்றால் என்ன?

10. பாரதியாரின் படைப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) ஒப்பியல் அறிவியல் அணுகுமுறைகள் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) தேசிய இலக்கியம் என்றால் என்ன? அதன் சிறப்புகளை விளக்கி எழுதுக.

12. (அ) தனிநாயக அடிகளாரின் ஒப்பிலக்கிய ஆய்வு நெறிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அண்மைக் கால ஒப்பிலக்கிய வளர்ச்சி நிலை குறித்து விளக்குக.

13. (அ) தமிழ் வீரயுகப்பாடல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்கம் பாடல்களும், கிரேக்கத் தன்னுணர்ச்சிப்பாடல்களும் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) கம்பனையும் வால்மீகியையும் குறித்து ஒப்பீடுக.

(அல்லது)

(ஆ) கம்பனும் மில்டனும் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) ஐரோப்பியப் புதுக்கவிதைகளுக்கும் தமிழ்ப் புதுக்கவிதைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) இளங்கோவும் சேக்ஸ்பியரும் குறித்து ஒப்பீட்டு ஆய்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மூவகை இலக்கியம் குறித்துக் கட்டுரை வரைக.

17. பண்டைய உரையாசிரியர்களின் ஒப்பிலக்கிய நோக்கு குறித்து விவரிக்க.

18. தமிழ் முல்லைத் திணைப்பாடல்களும் கிரேக்கப் பாடல்களும் குறித்துக் கட்டுரை வரைக.

19. திருக்குறளும் பிற மொழி நீதி இலக்கியங்களும் குறித்து ஒப்பீட்டு ஆராய்க.

20. தற்காலத் தமிழ் இலக்கியங்களில் மேலைநாட்டுத் தாக்கம் குறித்துக் கட்டுரை வரைக.

————————

| F–6479 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1E2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**First Semester**

தமிழ்

விருப்பப்பாடம் : மக்கள் தகவல் தொடர்பியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. மரபு வழிச் சாதனங்கள் என்றால் என்ன?

2. மின்னனுச் சாதனங்கள் என்றால் என்ன?

3. திங்கள் இதழ்களில் சிறப்புப் பெற்ற நான்கு இதழ்களின் பெயர்களைக் கூறுக.

4. படி எடுக்கும் பகுதி என்றால் என்ன?

5. வானொலி ஒலிபரப்புகள் ஐந்தினைக் கூறுக.

6. தொலைக்காட்சி வழியாக ஒலிபரப்பப்படும் கல்வி நிகழ்ச்சிகளைக் கூறுக.

7. திரைப்படத் தணிக்கையில் உறுப்பினர்களாக நியமிக்கப்பெறுபவர்கள் யாவர்? அவர்கள் யாரால் நியமிக்கப்பெறுகின்றனர்?

8. NFDC-என்பதன் விரிவாக்கம் என்ன?

9. சி.டி. ரோம் என்றால் என்ன?

10. தொலைவரி அச்சு என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொடர்பியல் என்றால் என்ன? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அச்சு வழிச் சாதனங்களின் இன்றியமையாமை குறித்து விளக்குக.

12. (அ) இதழ்கள் தொடங்கும் முன் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழ்களின் நிர்வாக அமைப்பு முறை குறித்து விளக்குக.

13. (அ) வானொலியின் அமைப்பு முறைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சாந்தா குழு பரிந்துரைகள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) கலைப்படங்கள் என்றால் என்ன? அதன் இன்றியமையாமை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) திரைப்படத் தணிக்கைகள் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) மக்கள் தொடர்பு அலுவலரின் பணிகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இணையத்தின் இன்றியமையாப் பணிகள் குறித்து விளக்கி எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொடர்பியல் சாதனங்களின் பாகுபாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

17. சமுதாய முன்னேற்றத்தில் இதழ்களின் பங்கு பற்றிக் கட்டுரை வரைக.

18. இந்தியாவில் தொலைக்காட்சியின் வரலாற்றைத் தொகுத்துரைக்க.

19. இன்றைய தமிழ்த் திரைப்படத்தின் போக்குகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. தொடர்பியலிலும் இதழியலிலும் கணிப்பொறியின் பயன்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–6481 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3E3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Third Semester**

தமிழ்

**விருப்பப்பாடம் : கிறித்துவமும் தமிழும்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. மேலை நாட்டார் மொழிபெயர்த்த நீதி நூல்கள் மூன்றினைக் கூறுக.

2. தொடக்க காலத்தில் கிறித்துவ அறிஞர்கள் படைத்துள்ள அகராதிகள் மூன்றினைக் கூறுக.

3. வீரமாமுனிவருக்கு வழங்கப்பட்ட பிற பெயர்களைக் கூறுக.

4. இராபர்ட்டு டி. நோபிலி எந்த நாட்டைச் சேர்ந்தவர்? அவர் பிறந்த ஆண்டினைக் கூறுக.

5. கால்டுவெல் எழுதிய இலக்கண நூல்களைக் கூறுக.

6. ஜி.யு. போப் செய்த தமிழ்ப் பணிகள் இரண்டினைக் கூறுக.

7. கிறித்துவர்களின் தேவாரம் என்று அழைக்கப்பெறும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?

8. தமிழ் நாவல்களின் முன்னோடி என்று அழைக்கப்படுபவர் யார்? அவர் பிறந்த ஊர் எது?

9. ஐசக் அருமைராஜனின் குறிப்பிடத்தக் மூன்று புதினங்களைக் கூறுக.

10. ஹெப்ஸிபாவின் படைப்புகள் இரண்டினைக் கூறுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) கிருத்துவர்களின் வருகையால் தமிழ் மொழி வளர்ச்சி எவ்வாறு இருந்தது? ஆராய்க.

(அல்லது)

(ஆ) காப்பிய இலக்கியங்களின் தோற்றச் சூழல் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) ஜி.யு.போப் அவர்களின் இலக்கியப் பணிகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டு குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) கால்வெல் அவர்களின் ஒப்பிலக்கண நூலின் சிறப்புக் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர் அவர்கள் இலக்கண வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பினைக் கூறுக.

14. (அ) பெத்தலகேம் குறவஞ்சியின் சிறப்புகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வேதநாயக சாஸ்திரியின் வரலாற்றுப் பின்புலத்தை விளக்கி எழுதுக.

15. (அ) திறனாய்வு என்றால் என்ன? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஹெப்ஸிபாவின் திறனாய்வு அணுகுமுறைகளைக் கூறுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மேலைநாட்டாரின் வருகையால் அச்சுக்கலை வளர்ந்த வரலாற்றை விளக்கி வரைக.

17. எல்லிஸ் துரையின் இலக்கியப் பணிகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. லாசராஸ் அவர்களின் மொழிபெயர்ப்புப் பணிகள் குறித்து விவரிக்க.

19. எச்.ஏ. கிருஷ்ணப் பிள்ளை தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினை விவரிக்க.

20. தமிழ் இலக்கியத் திறனாய்வுக்கு ஐசக் அருமைராசனின் பங்களிப்பு குறித்து விவரிக்க.

| F–5105 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1E3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**First Semester**

தமிழ்

விருப்பப்பாடம் – கோயிற்கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

பகுதி அ                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கோயில் வகைகளுள் மூன்றினைக் கூறுக.

2. 'மூர்த்தி' என்றால் என்ன?

3. 'தீர்த்தவாரி' என்றால் என்ன?

4. 'நாள் வழிபாடு' என்றால் என்ன?

5. குடவோலை முறை என்றால் என்ன?

6. மடங்கள் என்றால் என்ன?

7. நாட்டுப்புறப் பெண் தெய்வங்கள் நான்கினைக் கூறுக.

8. அடையாளம் என்றால் என்ன?

9. நம்பிக்கை என்றால் என்ன?

10. கிறித்துவ படையல் பொருள்கள் நான்கினைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) கோயிலின் தோற்றம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கோயில்களில் விருட்சம் பெறும் இடத்தினை ஆராய்க.

12. (அ) திருக்கல்யாணம் என்றால் என்ன? அதன் தனிச் சிறப்புகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பெருந் திருவிழாக்களின் சிறப்புகள் குறித்து விளக்குக.

13. (அ) திருக்கோயில் நிருவாகத்தில் பண்டைக்கால மன்னர்களின் பங்கு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) திருக்கோயில் பணியில் நகரத்தாரின் பங்கு குறித்து விளக்குக.

14. (அ) திருமாலின் திருவுருவச் சிறப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கிறித்துவ சமய திருவுருவ நிலை குறித்து எழுதுக.

15. (அ) பெருந்தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இசுலாமிய வழிபாட்டில் நம்பிக்கைகள் பெறுமிடத்தினை ஆராய்க.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆகமங்கள் கூறும் இலக்கணம் குறித்துக் கட்டுரை வரைக.

17. கோவில்களில் வழிபாடும் விழாக்களும் நடைபெறுவதன் நோக்கம் குறித்து ஆராய்க.

18. கோயில் நிருவாகத்தில் இந்து அறநிலையத் துறையின் செயல்பாடுகள் குறித்து விவரிக்க.

19. நாட்டுப்புறப் பெண் தெய்வங்களின் தனிச் சிறப்புகள் குறித்து விவரிக்க.

20. பெருந்தெய்வம், சிறுதெய்வங்களுக்குப் படைக்கப்பெறும் படையல் பொருள்களும் அதனால் விளையும் பலன்களும் குறித்துக் கட்டுரைக்க.

| F–5310 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3E6 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2021**

**Third Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — மொழியியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. மொழியியல் என்றால் என்ன?

2. மொழியியல் துறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. ஒலியியலின் வகைகள் யாவை?

4. மூக்கொலி என்றால் என்ன?

5. உருபனியல் என்றால் என்ன?

6. உருபொலியனின் இரண்டு விதிகளைக் குறிப்பிடுக.

7. அண்மை உறுப்பு விளக்கம் தருக.

8. மாற்றிலக்கணக் கோட்பாட்டை அறிமுகப்படுத்தியவர் யார்?

9. பொருண்மையியலின் வகைகளைக் குறிப்பிடுக.

10. சமுதாய மொழியியல் என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உயிரொலிகளின் வகைபாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒலியுருப்புகளும் அவற்றின் தொழில்களும் குறித்து விளக்குக.

12. (அ) ஒலியன்களைக் கண்டறிவதற்கு உதவும் இரு வகைக் கொள்கைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலியன்களின் வருகையும் மிகையும் குறித்து எழுதுக.

13. (அ) நைடாவின் விதிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒருபொலியனியல் விதிகளை விளக்குக.

14. (அ) தொடரியல் கோட்பாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாற்றிலக்கணக் கோட்பாட்டை விளக்குக.

15. (அ) சொற்பொருள் மாற்ற ஆய்வு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மானுட மொழியியல் குறித்து விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழியியலின் வரலாறு குறித்து விவரிக்க.

17. ஒலியன்கள் குறித்து நீ அறிந்தவற்றைத் தொகுத்துரைக்க.

18. உருபொலியனியலின் விதிகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. அண்மை உறுப்பு பாகுபாடு குறித்துக் கட்டுரை வரைக.

20. பொருண்மையியல் ஆய்வுகள் குறித்து விவரிக்க.